**மாணவியர் தூண்டல் பயிற்சி - 2019-2020**

தமிழ்த்துறை

**Visit to Local Area**

ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சிமகளிர் கல்லூரியில் தமிழ்த்துறை சுயநிதிப்பிரிவில் 75மாணவிகள் தூண்டல் பயிற்சிக்காக திருமூர்த்திமலைக்கு ஆசிரியப் பெருமக்களுடன் சென்றார்கள். அங்கு வடதிசைநோக்கி லிங்கவடிவில் எழுந்தருளியுள்ள பாறைதான் அமணலிங்கேஸ்வரர். இப்பாறையில் பொறிக்கப்பட்டுள்ள மும்மூர்த்திகளின் வடிவங்களையும் மாணவிகள் கண்டுகளித்தார்கள். மேலும் திருமூர்த்திமலையில் மலைமேல் 960 மீட்டர் உயரத்தில் உள்ள பஞ்சலிங்கசுவாமிகோவில் உள்ளது. இக்கோவிலில் சைவவைணவசமயம் சார்ந்த சிறப்புகளை மாணவிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும் அனைவரும் வழிப்டும்மலைகளுக்கு இடையில் அமைந்துள்ள மூலிகை குணமுள்ள பஞ்சலிங்க அருவியையும் கண்டு ரசித்தார்கள். மாணவிகள் மலைப்பகுதிகளில் மரக்கன்றுகளை நட்டும் விதைப்பந்துகளையும் வீசினார்கள்.







Time: 08-31-2019 14:04
Powered by NoteCam


Falls Trail, Thirumoorthy, Tamil Nadu 642101, India
Thirumoorthy
Tamil Nadu
India
31°C
88°F
2019-08-31(Sat) 12:33(pm)

மேலும் மேற்குத் தொடர்ச்ச ிமலைச்சாரலில் மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தமாய்க் குடிகொண்டிருக்கும் திருமூர்த்திமலைதென் அரணாய் அமைந்து, கங்கையிற் புனிதமான காவிரியில் சங்கமிக்கும் அமராவதி, பாலாறுகளின் நடுவில் ஏழு குளங்களில் இனியகுளமாய் வளங்கொளிக்கும் செங்குளம் பகுதியில் திருப்பதி ஸ்ரீவேங்கடேசப்பெருமாள் கோயில் அமையப்பெற்றுள்ளது. இந்தக் கோயிலில் பெருமாள், பத்மாவதிதாயார், ஆண்டாள், ஆஞ்சநேயர் ,சக்கரத்தாழ்வாருக்கு என தனிசன்னிதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இக்கோயிலின் சிறப்புகள் மாணவிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. இக்கோயிலை மாணவிகள் கண்டுரசித்தார்கள்.

